வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி ஒன்று சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ   அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி 356

புத்- அஅ]   யாழ்ப்பாணம்:-   நள ஞூ   தை மீ   அ - உ   வெள்ளிக்கிழமை (21 - 1 - 1977)   [இல: சஉ

## பொருள் வளமும் அருள் வளமும் பொலிந்து விளங்கும்
# மலேசிய பூமியில் ஒரு திங்கள்

## சிங்காபுரியின் சீர் பெறு செல்வச் சிறப்பு
### சைவ நெறிச் சால்பும் தகைமையும் தக்கபடி யுண்டு

ஈழத்திருநாட்டிலிருந்து உலக இந்துப் பேரவைக்குப் பேராளர்களாகச் சென்ற குழுவில் ஒருவனுக இருந்து மலேசியத் திருநாட்டிலும் சிங்கா புரியிலும் யான் கண்ட அருங் காட்சிகள் யாண்டும் மறக்கற் பாலன அன்று,

ஈழத்துக் குழுவுக்குத் தலைமை தாங்கிய பெரியார் யாழ். வளாக இந்து நாகரிகத் துறைப் பேராசிரியர் கலாநிதி சிவ ஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் ஆவர். இக் குழுவின் தலைவர் என்ற முறையிலே உலக இந்துப் பேரவை மாநாட்டில் இரு முறை கருத்தரங்கத் தலைவராகச் சிறமையக் கடமையாற் றும் வாய்ப்புப் பெற்றனர் அவர்.

பேராசிரியர் குருக்கள் அவர்கள் ஈழத்துப் பேராளர்களை அறிமுகப்படுத்தும்வேளையிற் சைவபரிபாலன சபைப் பிரதிநிதியை முதற்கண் குறிப்பிட்டு மிகப் பழைய சபையின் உபதலைவர் என்றும், நாவலர் நற்றகையாரின் சிறந்த சிந்தனைகளை நடைமுறையிற் கொணரும் பாக்கியம் படைத்த சபை அச் சபை என்றும அந்த நிலையம் வெளியிடும் இந்துசாதன ஆங்கில தமிழ் இதழ்களின் நீண்ட கால ஆசிரியரே சபைப் பிரதிநிதியென்றும் இவ் விரு ஏடுகளும் எமது நாட்டின் தலை சிறந்த சைவ வெளியீடுகள் என்றும் விரித்துரைத்தனர். ஏனைய பேராளர்கள்:— திருக்கேதீச்சரப் புனர் உத்தாரண சபை சார்பாக அதன் செயலாளர் திரு. இ. நமசிவாயம் அவர்களையும், 'ஆத்மஜோதி' நிலைய, இந்துமாமன்றப் பிரதிநிதி திரு நா. முத்தையா அவர்களையும், ஏனையோரையும அந்த நிலையங்களின் பெருமைகளையுஞ் சுட்டிக காட்டி அவர்கள் ஆற்றும் அரும் பணிகளையும குறிப்பிட்டனர்.

கலாநிதி குருக்கள் அவர்கள் உலக இந்துப் பேரவை காஞ்சியிற் பெரியார் அவர்கள் சந்நிதியில்

வளர்சசி 2-ம் பக்கம்

## சித்தாந்தப் பரீட்சை - 1977.

சைவபரிபாலன சபை நடாத்தும் சித்தாந்த பரீட்சை 28 1.77 முதல் 30.1.77 வரை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். பரீட்சார்த்திகளுக்குப் பிரவேசச்சீட்டு, நேரசூசனம் என்பன அனுப்பப்பட்டுவிட்டன,

நேரசூசனம்

| | காலை | மாலை |
|---|---|---|
| 28-1-76 வெள்ளி | இலக்கியம் | இலக்கணம் |
| 29.1.76 சனி | திருமுறை | சாத்திரம் |
| 30.1.76 ஞாயிறு | உரைநடை | ——— |

### கூட்டுப்பிரார்த்தனைச் சபை விசேட விழா

சாவகச்சேரி - சங்கத்தானை மீனுட்சியம்மன் ஆலயக் கூட்டுப்பிரார்த்தனை விழா தைத்திங்கள் 15-ம் நாள் (28- -77 வெள்ளிக் கிழமை இரவு 6-30மணிக்கு சைவமணி, வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெறும். நல்லை ஞானசப்பந்தர் ஆதீன குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரைவழங்குவர் யாழ்ப்பாணம் மில்க்வைத் தொழிலதிபர் சிவநெறிப் புரவலர் திரு. க. கனகராசா ஜே. பீ, தம்பதிகளின் சேவையைப் பாராட்டும நிகழ்ச்சியும் இடம்பெறும் திரு எஸ், கே சிவபாலன் அவர்களின் பண்ணிசைக் கச்சேரி நிகழும.

### சமயப் பரீட்சை

சாங்கைதயர்மடம் — ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபி விருத்திக் கழகம் மாணவ மாணவிகள் மத்தியில சைவ சமய அறிவுப் பரீட்சை ஒன்றை நடாத்தவிருக்கின்றனர்.

வழமைபோல் நடைபெறவிருக்கும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும இறுதி நாள் 31-1-77 பரீட்சை நிகழும் நாள் 6-2-77 ஞாயிறு காலை 9 மணி.

இடம் வண். நாவலர் மகா வித்தியாலயம்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்குப் புத்தகப பரிசிலகளும் 40 புள்ளிகளுக்கு மேல பெறுபவர்களுக்குச் சான்றுப் பத்திரமும வழங்கபபெறும், பரிசில் வழங்கல 16-2-77 இல மகா சிவராத்திரியன்று நிகழுமென பரீட்சைச் செயலாளர் வ. கந்தசாமி அறிவிக்கின்றார்.

### சைவ மணம் மலிந்திடுக!

"இறை — ஒளி"

மங்கலமும் வண்மையும மாரி வளமும்சீர்
தங்கவே தைத்திங்கள் சால்புறப் — பொங்கல்
பொலிந்தது பூவுலகிற் புண்ணியம் ஓங்க
மலிந்திடச் சைவ மணம்.

# சக ஏட்டின் சான்றுரை



மலேசிய தமிழ் இதழ்களில் பிரபல்யமான "தமிழ் நேசன்". உலக இந்து மாநாட்டுக்குச் சென்ற சைவ பரிபாலன சபைப் பிரதிநிதியும் இந்து சாதன ஆசிரியருமான திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களைப்பற்றி 25 - 12 - 1976 - ஆம் திகதி இதழில் "ஸ்ரீலங்காவின் 'இந்துசாதன ஆசிரியர்'' என்ற தலைப்பில் வெளியிட்ட பேட்டிக் கட்டுரை வருமாறு:

கோலாலம்பூரில் நடைபெற்ற உலக இந்துப் பேரவை மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டும் ஸ்ரீலங்காவிலிருந்து பேராளராக வந்து கலந்து கொண்ட சைவப்பெரியார் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் (வயது 70) நேற்று நேசன் அலுவலகத்திற்கு வருகை புரிந்தவர்.

யாழ்ப்பாணத்தில் வழக்கறிஞராகத் தொழில் நடத்

இவரும் திரு சிவப்பிரகாசம் 'இந்து ஆர்கன்' இந்து சாதனம் என்ற இரு வார இதழ்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் 1949 முதல் ஆசிரியராகவிருந்து நடத்தி வருகிறார். இவ் விரு பத்திரிகைகளையும் ஈழத்து யாழ் சைவபரிபாலனசபை வெளியிடுகிறது. இவ்விரு பத்திரிகைகளும், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும கடந்த 1889 ஆம்

(வளர்ச்சி 2ம் பக்கம்)

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

நள ஹூ தை மீ அ-உ வெள்ளி

## பணி செய்து கிடப்போம்!

துன்பம் அடைக்கும் தூய திருவடியிருக்க அன்பு வழங்கும் அபய கரம் இருக்க என்னே யாம் அலமந்துபோவது, 'ஆதரித்தழைத்தால் அதெந்துவே யென்றருள்' அப்பன் உண்டு. பின் யாதுக்கு காப் பின்னுல் நிற்பது? கோளென் செயும்? கொடுங் கூற்றென் செயும்? நாளெதுவானுலும், ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே என்று ஞானசம்பந்தப்பெருமான நெஞ்சே அஞ்சே லென ஆறுதல் கூறிவிடவும் தேறுகின்றேமில்லையே ஆனல் இந்த அபயகரம் யாருக்குத் தோற்றும்? அடியாரவர்க்குத்தான் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றூர்கள். எனவே அல்லல் அகற்றவும் இன்னலில் இருந்து நீங்கவும் நாம் அடியார்களாக வாழ வேண்டும், வேறு விதமாகக் கூறினல் 'பணி செய்து கிடக்க' வேண்டும்.

பணிதல் நன்று பரம் பொருளுக்குப் பணி செய்து அவ்வாறு தொண்டாற்றுகின்றவர்களுக்குப் பணிந்து நடப்போமேயானல் அச்சம் என்பதில்லையே பணிந்தவர்கள் எல்லோருக்கும் அடியானுக வாழ்வார் ஆரூரர்.

தொண்டு புரியும் தூய நெறி பண்டை நாட் பண்பாக இருந்தமையால் அக்காலத்தில் அமைதியும் அருளும் ஒருங்கு விளங்கின. அற்புதங்கள் பல நிகழ்ந்தன. தெய்வீக நெறிச் செம்மை திகழ்ந்தது அந் நிலை இந் நாளில் இல்லை! என்னே? பணி செய்வாரில்லையெனக.

இறைநெறி நிற்றலேயே பணியென்பர் ஆன்றோர். அறுபத்துமூன்று நாயன்மார் பரன்றெண்டாற்றிய பான்மையாலே திருத்தொண்டரெனத் திகழ்ந்தனர். உலகமும் உய்ந்தது. கலகம் என்பது சடுகளவும் இன்றுன நிலையிலிருந்தது.

சிந்தாகுலம் தீர்த்தெமையாள்வதற்குத் தெய்வம் எந்தையுமாய் எந் தாயுமாயிருக்க அந்தோ யாம் அலைகின்கின்றேமே? அலமந்த நிலையில் அவனைப் போய்க்கொண்டிருப்பதைக் கண்டும் மீண்டும் வாளா கிடக்கின்றேமே? எம் மூன்னேர் காட்டிய நெறியை எண்ணிப் பார்க்க எள்ளளவு வேளையும் கிட்டுகின்றதில்லையே!

நாளுக்கு நாள் நாழிகைக்கு நாழிகை வாழ வழி அறியாத நிலையிலிருக்கும் அந்தகர்களாகிவிட்டோமா சைவ மக்களா இந்த நிலையை மாற்றி அமைக்க முடியாதவர்களா? கொலையும் களவும் புலையும் பொய்யும் மலிந்து வரும் நிலைமை மாற்றச் சைவ நீதியொன்றுண்டென் றறிந்துமா நாம் அல்லற்படுகின்றேம்.

திருத் தொண்டு பரவக் கருத்துக்கொள்ள வாரீர்.

வேதநெறி தழைத் தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

வழியிருக்கின்றது; மனம் வாட வேண்டியதில்லை.

அப்பர் அடியார் என்ன சொன்னர்.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
தாமார்க்கும் குடியான தன்மையானைச்

... ... ... ...

மன்னெறி அடைய ஞான சம்பந்தர் கூறுவ தென்ன?

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஒது வார்தமை நன்னெறிக் குய்ப்பது

சிலாங்கூர்

## கந்தசுவாமிகோயிற் சிறப்பு நிகழ்ச்சி

### பேராசிரியர் சங்காபிடேகக் குருவாயமைந்த பேறு

இந்து நாகரிகத் துறைப் பேராசிரியர் அந்தக் கலைத் திறனை எந்த விதமாகச் சிலாங்கூரிற் காண்பித்தனர் என்று அறிய விரும்புகிறீர்களா?

சிலாங்கூரிலே கந்தசுவாமிகோயில் மிக முறையாகச் சைவ சங்கத்தினரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இலங்கையிற் கோயில் என்ற எண்ணத்தை எழுப்பும் தத்துவம் பெற்றிருக்கின்றது. கந்தவனமும் மயிலாடுங் காட்சியும் அக் கோயிலை தனக்குச் சொந்தமாய்க் கொண்டிருக்கிறது. அருகாமையில் ஒரு கலா மண்டபம் காண்போருள்ளத்தைக் கவரும் வண்ணம் கவின் பெற அமைந்திருக்கின்றது.

இத்தகைய கோயிலின் சிறப்பு மேலும் சிறப்புற சென்ற திங்களில் ஓர் சங்காபிடேகம் நடைபெற்றது அதற்குக் குருவாயமைந்தார். யாழ் வளாக இந்து நாகரிகத் துறைப் பேராசிரியரும் உலக இந்துப் பேரவை மலேசிய மாநாட்டில் இலங்கைக் குழுவின் தலைவருமான சிவசிறீ கா. கைலாசநாதக் குருக்கள்.

மாலை 4 மணி தொடக்கம் இரவு பத்து மணி வரை வேதசிவாகம முறைப்படி நிகழ்ந்த சங்காபிஷேகமும் சண்முக அர்ச்சனையும்தனித்தன்மை வாய்ந்தன. அடியார்கள் அசையாமல் ஆறு மணித்தியால நேரம் அமைந்திருந்தனர்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் வைத்தியகலாநிதி கனகசபை நன்றி நவின்றனர்.

x x x

## தெய்விக மலை -
### ஆங்கு ஒரு திருக்கோயில்

பத்துமலையானுக்கு
அரோகரா! என்றனர்

கதிர்காம யாத்திரை
நினைவுக்கு வந்தது!

கோலாலம்பூரிலே பல கல் தொலைவில் உளளது ஓர் தெய்விகமலை, அக குன்றின் உச்சியில் முருகப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் அழகு தான் என்னே, உச்சி வரைக்கும் படிகள் உண்டு. மின் வழி ஏகும் வண்டியும் உண்டு. நாடோறும் யாத்திரிகர் பன்னூற்றுக் கணக்கானேர் தேடித் தரிசிக்கும் இத் தலத்தின் பெருமை அளவிட முடியாது.

அடிவாரத்திலே அழகுக்கழகு செய்வான்போன்று ஒரு விநோத சைவநெறிக் கலை வீடு புராண இதிகாசங்கள் புகட்டுவனவற்றை ஓவியந் தீட்டி விளங்க வைக்கின்றது இத்தக் கலைக் கூடம். மலைப் பயணத்தின்போது பத்துமலை அப்பனுக்கு அரோகரா! என்ற பேரொலிகேட்டது; யாம் கதிர்காமத்தில் நிற்கிறேமே என்ற உணர்வு பெற்றேம்.

அருகாமையில் திவ்விய ஜீவன சங்க மடம் அணி செய்கின்றது. ——

## பொருள் வளமும் அருள் வளமும்

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

உருவான ஞான்று ஈழத்துச் செயலாளர்நாயகமாக நியமிக்கப்பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. குருக்கள் அவர்களுக்கு மலேசியா மாநாட்டுக்கு ஐந்து பேராளர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு அளிக்கப்பட்டது. அவர்கள் சைவ பரிபாலன சபை இந்துமாமன்றம், திருக்கேதீச்சரச்சபை, 'ஆத்மஜோதி' நிலையம் ஆகியவற்றின் தலைவர்களுக்கு விடுத்த வேண்டுகோளின் பயனாகவே இந்த ஐவர் குழு தோன்றியது. அதற்குத் தலைவர் பேராசிரியர் குருக்கள் அவர்களே.

இந்து பேரவையின் நிகழ்ச்சி அந்த அவையின் செயலகத்தாரால் வெளிவர இருக்கின்றதாகையால் அவ் விபரங்கள் புறம்பாகப் பிரசுரிக்கப்படுதல் நன்று என்று கருதி அவற்றைப்பற்றி ஆங்காங்கு சுட்டிக் காட்டுவதோடு மலேசியா, சிங்கபுரி ஆம் இவ் விரு நாடுகளிலும்உள்ள இந்து சங்கங்கள் எவ்வகையில் இப் பேரவைப் பேராளர்களைப் பயன்படுத்தினர் என்று ஈண்டு உரைத்தல் பொருத்தமாகும்.

மலேசியா இந்துசங்கம் என்ற ஓர் சங்கம் நல்ல முறையில் இயங்கி வருகின்றது. அதற்குச் செயலாளராக உள்ளவர் இராணுவப் பகுதியிலே தளபதியாகக் கடமையாற்றுபவர். (தளபதி சாத்தையா என்று தகைமையுடன் அழைக்கப்படுபவர்). இராணுவத்துக்கும் சமயத்துக்கும் அதிலும் இந்து மதத்துக்கும் என்ன ஒற்றுமைப்பாடு என்று நாமெல்லோரும் வியப்புற்றிருந்தோம். ஆனல் அந்த இளைஞர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பயிற்சித் திறமையைத் தமது சமய சேவையில் நன்கமைத்து உள்ளத்தில் இயல்பாக ஊறுகின்ற மத உணர்ச்சியை வழிப்படுத்துவதை நேரிற் பார்த்தோம். மகிழ்ந்தோம இந்த இளைஞரே உலக இந்துப் பேரவையின மலேசிய அமைப்புக்கும் அச்சாணி போன்றவர்.

(வளரும்)

வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே,

[illegible] சோர்வு கொள்ளற்க, அடியார்களாக வாழ்க. இன்பமே எந்நாளும்; துன்பமில்லை,

## 130-ஆவது ஆராதனை

சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் 130-வது ஆராதனைவிழா நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் 20,21, 22-1-77வெள்ளி சனி ஞாயிறு தினங்களில் மாலை 4.00 மணி தொடக்கம் நிகழும்.

## இசைமணி பட்டப் பரீட்சை

அகில இலங்கை இசைப் பேரவையினர், வட இலங்கைச் சங்கீத சபையினரால் நடாத்தப்பெறும் சங்கீதப் பரீட்சையில் 5, 6ம் பிரிவுகளில் "சித்தி யெய்திய மாணவ ஆசிரியர்களுக்கு அவர்களின் திறமைக்கேற்ப 'இசைமணி" என்னும் சிறப்புப் பட்டம் வழங்கி ஊக்குவிக்கத் தீர்மானித்துள்ளது"

என்று அ. இ. இ. பேரவைச் செயலாளர் தெரிவிக்கின்றூர்.

## சக ஏட்டின் ........

1-ம் பக்கத்து வளர்ச்சி

ஆண்டு ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் தொடர்பாய் வெளிவந்தவை; இவை இதுகாறும் நடைபெற்று வருகின்றன.

சைவபரிபாலன சபையின் முன்னுள் தலைவரான திரு ஆர் என். சிவப்பிரகாசம் தற்சமயம் அச்சபையின் துணைத்தலைவராகச்சேவை புரிந்து வருகிறூர்.

அத்தோடு, சிதம்பரம் நாவலர் அறங்காவலர் கட்டுப்பாட்டுக் குழுவில் ஒரு உறுப்பினராகவுள்ள திரு சிவப்பிரகாசம், துர்க்கையம்மன் கோவிலின் துணைத் தலைவராகவும், அகில இலங்கைச் சைவ மத்திய சபையின் தலைவராகவும் ஒருங்கே சேவையாற்றி வருகிறூர்.

இவர் அடக்கமே உருவானவர், சிரித்தமுகமும் தூய வெண்ணுடையில் அறிவு காந்தும கண்களோடு இனிமையாகவும்; கனிவாயும் உரையாற்றுகிறூர். இவருக்குப் பல்சமயப் புலமையும் சைவ சித்தாந்தத்தில் ஆழ்ந்த ஈடுபாடும் உண்டு.

பொதுநலச் சேவையில் அதிக ஈடுபாடு காட்டி வரும் இப்பெரியார். கடந்த 1959 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்று விட்டு திரும்பும் வழியில் மலேசியாவுக்கு வந்தபோது மலேசிய மக்களுடன் தமிழ் நேசன் குடும்பத்தினரும் அவரைவரவேற்றது இங்கு குறிப்பிடத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீர் பெருகு சிங்காபுரிச் செண்பக விநாயகர் தேர் உலாச் சிறப்பு

### பத்தர் குழாம் பரவசம்

அழகான ஆலய அமைப்பு சிங்கபுரிச் சீருக்குச் சீர் செய்யும் தேவாலயம்; செண்பக விநாயகப் பெருமான் எழுந்தருளிய கோயில் தமிழகச் சைவ மக்களின் தனிப் பெரும் பொக்கிஷம்.

தைப் பொங்கல் மற்றை நாள் இவ் வாலயத்திற் கொடியேற்ற விழாவை யாழ்ப்பாணம்வேதாகம வித்தகர் பிரமஸ்ரீ விசுவநாதக் குருக்கள் அலங்காரமாக நடாத்தி வைத்தனர்.

புனிதம் பொலிந்துள்ள இத் திருக் கோவிலின் இராஜ கோபுர அழகும் தூபிச் சிறப்பும் குறிப்பிடத் தக்கன. நாவலர் ஐயாவின் உருவம் வீதிச் சுவரில் யோக சுவாமிகளின் உருவ ஓவியத்துடன் விளங்கும் காட்சி கவின் தருவது.

### ஈழத்தில் நின்ற உணர்ச்சி உண்டானது

இரண்டாம் நாள் விழாவின்பொழுது இந்துசாதன ஆசிரியர் திரு நம சிவப்பிரகாசம் அவர்கள் "சேக்கிழாரும் திருத்தொண்டர் புராணமும" என்ற பொருள்பற்றி உரையாற்றினர். பரிபாலன சபைத் தலைவர் திரு. மாணிக்கவாசகர் தலைமை தாங்கிச் சொற்பெருக்காளரை வரவேற்றனர்.

ஆலயச் சூழலின் புனிதமும் — அமைதியும் இயற்கையின் வளங்களும் ஒருசேர வனப்புடன் விளங்குகின்றன, வழிபட வரும பத்தர்களின் அருள எழுச்சியும் தமிழர்க்கேக உரித்தாயவிருந்தோம்பும் பெரும் பண்பும தெய்வ மொழியாம் தமிழ்மீதுள்ள ஆராக் காதலும இன்ன பிறவும் நினைகளுந் தொறும நெஞ்சில் இனிக்கின்றன.

யாழ்ப்பாணக் கோயில் களிற சுவாமி தரிசனஞ் செய்தது போன்றிருந்தது ஸ்ரீ செண்பக விநாயகர் வழிபாடு.

---

## அன்பு மூவகைப்படும்

(சைவப்பெரியார் அ. நாகலிங்கம் அவர்கள்)

(முன்வளர்ச்சி — 2

வாய் எச்சில் நீரைத் திருமுடியில் உமிழ்தல் அதிலும் பாதகம், தலையில் கொணர்ந்த மலர் கொடர்ச்சித்தல் அதிலும் பாதகம், இறைச்சியைத் திருமுன் வைத்தல் மிகக் கெட்டியபாதகம். இது உலகத்தவர் வழக்கு திண்ணன் இவ்வாசாரங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு எல்லாவற்றையுங் கடந்து நின்றான்.

திண்ணனுடைய அன்பின் பெருக்கைக் காளத்திநாதர் சிவகோசரியாருக்குக் காண்பிக்க நினைந்து தமது ஒருகண்ணிலிருந்து இரத்தம் பெருகுமாறு செய்தார். இதனைக்கண்ட திண்ணன் தான் கொண்டு வந்த இறைச்சி, மஞ்சன நீர், மலர் எல்லாஞ்சிதற நிலத்தில் வீழ்ந்தான். குருதி பாய்தலை நிறுத்துவதற்குத் தானறிந்திருந்த மருந்துகளெல்லாம் செய்து பார்த்தான். [illegible] ஒழும் குருதிதலைப்[illegible] கண்டு "உற்றநோய் தீர்ப்பது ஊனுக்கு ஊனே ஆம்" உரை நினைவு வரத்தனது கண்ணையே இடந்தப்ப நினைந்தான். சாதாரண மூன்னொன்று குத்தினாலே தாங்கமுடியாது அல்லற்படுவோம் நாம். ஏன்? நான் என்கிற நினைவினாற்றான். அங்கங்களெல்லாஞ் சிறந்த அங்கமாகிய தனது கண்ணை [illegible] முற்பட்டு [illegible] 'தன்னை மறந்தான்",

(வளரும்)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு. இல: 10763 ஈடு

1. வேலுப்பிள்ளை தம்பையாவும் பெண்
2. செல்லம்மாவும் - சிறுவிளான் 2ம் வளக்காளி தானகவும் 1-ம் வளக்காளியின் அற்றோணித்தத்துவ காரியாகவும். வழக்காளிகள்

எதிராக

1. நமசிவாயகம் லாதலூராரும் பெண்
2. நவமணியும் - அளவெட்டி எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு. 10763-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால்விபரிக்கப்படும் ஒரு அண்டிக்காணி 1977-ம் ஆண்டு மாசி மாதம் 21-ந் திகதி (21-2-77) திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 3,500/- இன்னும் 8-4-69 தொடக்கம் 15-2-73 வரைக்கும் 2,000/- ரூபாய்க்கு 9 வீத வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 759-55 தீர்வைத்தொகையில் கொடுபட்ட ரூபாய் 2,000/-ம் கழிக்கப்படல் வேண்டும்,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழைக் கோயிற்பற்று தெல்லிப்பழை வடமேற்கு இருந பதராயன் புதுக்காடும் பதராயன் நீலன் புதுக்காடும் தலைப்பரப்பும் இதற்கு எல்லை கிழக்கு சரவணமுத்து சேதுகாவலம் பிள்ளைக்கும் பெண் சரஸ்வதிக்கும் உரிய ஆதனம் வடக்கு றோட்டு மேற்கு முருகேசு வர்ணகுலசிங்கத்தின் ஆதனம். தெற்கு வயிரவப்பிள்ளை செல்லையாவின் உரிமைக்காரருக்கும் கதிரமலை பெண் சிவக்கொழுந்துவுக்கும உரிய ஆதனங்கள் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

அ. போ எதிர்மன்னசிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

14 டேவிற் வீதி
யாழ்ப்பாணம், 1-12-76 எம். 103, 21-

---

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல. ஈடு 1,099

துன்னாலை வடக்கு வயிரமுத்து வடிவேலு — வாதி

எதிராக

துன்னாலை வடக்கு ஞானப்பிரகாசம் ஆரோக்கியநாதன் — பிரதிவாதி

மேற் குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1977-ம் ஆண்டு மாசி மாதம் 28-ஆம் திகதி (28-2-77) திங்கட் கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த காணியில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

[கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா4500/-]

### தீர்வைத் தொகை

ரூபா 2640/-உம், ரூபா 1500/- க்கு 23-5-75 தொடக்கம் 16-7-75 வரையும வருடமொன்றுக்கு நூற்றுக்கு பத்து வீத வட்டியும் 17-7-1975 தொடக்கம் விற்பனவுத்திகதி வரை கோட்டு வட்டி 5 வீதமும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று துன்னாலை வீரசுந்தரமுதலிக் குறிச்சியிறை பருமணற்பாதி பர 17, 3/8 இதில் நிந்தமான பர 9 குளி 9/16 இதில் மேறகுப் புறமாக 1/3 பங்குக்கு நிர 3 குளி. 0 3/16 எல்லை கிழக்கு முருகேசு பரமசாமிக்குடைய வாதனம் வடக்கு கை ஒழுங்கை, மேற்கு ஒழுங்கை, தெற்கு ஏரம்பு கதிர்காமுவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், இதடங்கலும்

**தி. வேலுப்பிள்ளை J. P.**
[ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு ஆணையாளர், விலைமதிப்பாளர்]

'கெச்சர் வாசம்"
வல்வெட்டித்துறை
10-1-77 104 21-

---

## பண்ணிசை பரவச்செய்வோம்

## பண்ணிசைப் புலவருக்கு பாராட்டு

'மாதந்தோறும் ஒவ்வொரு சைவசமய நிகழ்ச்சிகளை நடாத்திச் சைவப் பெரும் பணியை மேன்மேலும் சிறப்பிக்க எமது சபை முடிவு செய்துள்ளது. எமது சபையின் ஆதரவில், இன்றைய தினம், பண்ணிசை நிகழ்ச்சியுடன் இத் தொண்டினை ஆரம்பிக்கின்றோம். நல்லை, ஞானசம்பந்தர் ஆதீனப் பண்ணிசைப் புலவரான, பண்ணிசை வேந்தன் பண்ணிசைச் செல்வன், தாவடியூர் எஸ் ஆர். திருஞானசம்பந்தன், இப் பெரும் பணியை ஆரம்பித்துச் சிறப்பிப்பது மிகவும் பொருத்தமானதாகும். அமரர் பண்ணிசை வள்ளல், தாவடி எஸ். இராசையாவின் மகனை இவர், நல்லை. ஆதீனத்தில் பண்ணிசைப் புலவராக இருப்பதும் ஓர் சிறப்பாகும், தந்தையின வழியில் தெய்வீகத் திருமுறைப் பணியாற்றி வருவது, குறிப்பிடத் தக்கதாகும். எமது சபை மாதந்தோறும் ஒவ்வொரு சைவசமய நிகழ்ச்சியை நடாத்தவுள்ளது."

இவ்வாறு தைப் பொங்கல் தினத்தன்று, அநுரதபுரம் கதிரேசன் ஆலய மண்டபத்தில், விவேகானந்த சபையால் நடாத்தப் பெற்ற, மாதாந்தச் சமய நிகழ்ச்சியின் ஆரம்ப வைபவத்திற்குத் தலைமை தாங்கி யுரையாற்றிய, அநுரதபுரம் மகாவித்தியாலய அதிபர் திரு. சிவசுப்பிரமணியம். குறிப்பிட்டார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனப் பண்ணிசைப் புலவர் திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரி மாதாந்தச் சமய நிகழ்ச்சிகளின் முதலாவது அம்சமாக இடம் பெற்றது.

---

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. 11972 / ஈடு

புலோலி கிழக்கு சேதுநாதர் சின்னையா மைம்பெண் பார்வதிப்பிள்ளை அல்லது தெய்வானைப்பிள்ளை வாதி,

எதிராக

புலோலி கிழக்கு 1 பெரியதம்பி செல்லையாவும்,
2 மனைவி பார்வதியும் பிரதிவாதிகள்

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு திரும்பவும் அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும ஆதனங்கள் 1977ம் ஆண்டு பங்குனி மாதம் 1ந் திகதி (1-3-1977) செவ்வாய்க்கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த காணிகளில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

[கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 15 000]

### தீர்வைத் தொகை

| | | |
|---|---|---|
| தீர்வைத் தொகை | ரூபா | 6,750 00 |
| 7-9-72 தொடக்கம் 6-3-73 வரை ரூபா 5000 12 வீத வட்டி | ,, | 300 00 |
| 7-3-73 தொடக்கம் 7-9-75 வரை ரூபா 7,050க்கு 5 வீத வட்டி | ,, | 881 25 |
| மொத்தம் | ,, | 7,931 25 |
| கொடுபட்ட தொகை | ,, | 1,500 00 |
| 8-9-75 தொடக்கம் 24-2-75 வரை ரூ 6,431 25க்கு | ,, | 6,431 25 |
| 5 வீத வட்டி | ,, | 93 63 |
| மொத்தம் | ,, | 6,524 88 |
| இதில் கோட்டில் கட்டப்பட்டது | ,, | 1,000 00 |
| மொத்தம் | ,, | 5,524 88 |
| 25-12-75 தொடக்கம் 20-9-76 வரை ரூபா 5,524 88க்கு 5 வீத வட்டி | ,, | 207 18 |
| மொத்தம் | ,, | 5 732 06 |
| இதில் கட்டப்பட்ட தொகை | ,, | 4,000 00 |
| மொத்தம் | ,, | 1732 06 |
| 21-9-1976 தொடக்கம் 31-12-76 வரை 5 வீத வட்டி | ,, | 2 65 |
| முழுத்தொகை | ரூபா | 1753 71 |

மேலும் விற்பனவுத் திகதி வரை கோட்டு வட்டியும்

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று:-

(1) புலோலி கிழக்கு சிங்கபாகு தேவன் குறிச்சியிறை கள்ளியன்திடல் நிர. 67½. இதில் கிழக்குப்புறமாக நிர. 61ல் வடக்குப்புறமா நிர. 15 குளி 10 நீக்கி அதற்கு அடுத்து தெற்குப் புறமாக நிர. 47 குளி 14 எல்லை கிழக்கு றோட்டு வடக்கு பின் சொல்லப்படுமாதனம் மேற்கு குமார சதாசிவத்திற்கும மறுபேருக்குமுடைய வாதனம் தெற்கு அல்லைப் பெற்றுள்ள சுப்பிரமணியம் கோவிலாதனம: இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் நிர. 9 குளி ¾யில் 1/3ல் 1/3 பங்கும் (அதாவது நிர 9 குளி ¾யில் 9 பங்கும், இன்னும் மேற்கெல்லை தெற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணறுகளிற் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

(2) ஷை இறை பயினி செம்பாடு (இதை செம்பாடு எனவும் அழைக்கப்படுகிறது). நிர. 10 இதுவும் மேற்படியிறை கள்ளியன் திடல் 4/5 பங்கும் இதில் நிர. 15 குளி 10 (அதாவது கள்ளியன்திடல் நிர 10 குளி 8 இதில் மேற்குப்புறமாக 1/5 கழித்து மிகுதி 4/5 பங்கு) ஒருசேர 1937ம் ஆண்டு வைகாசி மாதம் 17ந் திகதி உலாந்தா மேஸ்தர் மா வேலுப்பிள்ளை என்பவரால் 00ம் இலக்க அளவைப்படத்தில் விஸ்தாரிக்கப்பட்டிருக்கிறது, எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு அரசினர் வைத்தியசாலை, மேற்கு கந்தர் அரிவகுட்டிக்கும், மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு மேற் சொல்லிய 1ம் ஆதனம் இதடங்கலில் சொரியலாய் 8/10ல் 3/8 பங்கும்.

**தி. வேலுப்பிள்ளை J. P.**
[ஏலதாரர் நீதிமன்ற விற்பனவு ஆணையாளர், விலைமதிப்பாளர்]

"கெச்சர் வாசம்"
வல்வெட்டித்துறை
10 1-1977. 105. 21-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

வேதத்தின் அந்தமும், மிக்க சித்தாந்தமும்,
நாதத்தின் அந்தமும், நற்போத அந்தமும்,
ஓத்தகும் எட்டு, யோகாந்த அந்தமும்,
ஆதிக் கலாந்தமும், ஆறந்த மாமே.

The end of the Vedas (Vedantam or Upanishad), the end of profound mental investigation (Siddhantam), the end of Natham (the sonorous principle, the first product of creation), the end of right knowledge (its essence), the end of the eight-stepped Yogam worthy of mention (Samadhi or perfect rest) and the end of the ancient Kalai (gracious instructions), those are the six ends (or modes of conclusion).

Hindu Organ

Friday, January 21, 1977

## Why Worry

THE most disquieting feature of life is the state of worry in which man is placed. It is in the order of things that this, like any other, often happens. In the chain of action and reaction, humanity is governed by the circumstances that teach many a lesson. The Shastras and the Prayers of the Great Teachers known to us as Thirumurai, however, give us the consolation that while Karma is set working, there is a lesson to be learnt showing a way hopefully to endure with constant and dedicated prayer to the Almighty. But unfortunately we humans overlook this proviso and feel depressed in the course of the ups and downs of life. The Thirumurais are in effect a panacea for all our ills.

The Great Nayanmars have in their inimitable form of worship shown the way to endure everything that happens to us. Thus we have always a way out of worry. The more enlightened we become the less we worry ourselves. To become aware of truth, learning in its real perspective is necessary, learning that will make the student free from faults and earn acts of Grace. Thus there will be no need for him to worry himself.

The Dance of Shiva, His chanting of the Vedam and other acts are all Gracious deeds to destroy sin and to put an end to the misery of birth and death.

Saint Thirugnanasambandar in his Thirupasuram gives this idea.

"ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் எனக்கேட்டீ ராகில்
நாடும் திறத்தார்க்கு அருளல்லது நாட்டலாமே.",

To the true devotee there cannot be
Any fear nor can there be anything to cause fear
No one will ever wish to become worried
Prayer will make us reach the stage where
Nothing will dread us and worry will be unknown

The present situation calls for prayer individually and collectively.

அருளல்லது இல்லை அரன், அவனன்றி
அருளில்லை, ஆதலின் ஓர் உயிர்க்குத்
தருகின்றபோது இருகைத் தாயர் தம்பால்
வருகின்ற நண்பு வகுத்திடும் தானே.

God and Grace (Love) are inseparable. When a living being is born, the hand of God and Love, as that of foster-mothers, is manifest.

## South Asian Studies Seminar

Prof S. Arasaratnam, a prominent historian from Sri Lanka, presently professor of History at the University of New England Australia, delivered an interesting lecture on the **Images of the past in Nation Building** under the auspices of the Asian Studies seminar at the Jaffna Campus on the 13th inst. In the course of his very interesting and instructive lecture the professor pointed examples from the history of the world and especially from India to illustrate the importance of the images of the past in nation building. He also said that many countries of Asia which were under European domination are still in the process of nation building. An interesting discussion followed the lecture which was attended by a large gathering of scholars from Jaffna. Prof S. Arasaratnam is on his way to the Cambridge University where he will be a visiting professor for a year, before he returns to Australia.

## The Blind Violinist

(BY E. P. RASIAH, J. P.)

On Friday mornings, when I enter the Nallur Kandasamy Temple by the main entrance in the east, I (like many others) stand captivated by a blind violinist seated there and playing his violin all by himself. The violin poured forth, as he played note after note, enchanting music. The violin was middle aged like its master; yet, it had a power to capture the heart of anyone, who cared to stop and listen to its tunes

Shabby and slightly soiled clothes were his garments. His expression did not help to reveal what sort of a person he was or what his past was. Sometimes he will play a song tapping out the notes with his soiled feet or tossing his head in gay abandon. Sometimes he softened into tenderness, perhaps re-capturing memories of past events that may never come back to him; or could it be that he was appealing to His Master to give him back his sight; or was he merely entertaining his fellow-worshippers to earn his livelihood?

I dropped a coin, many others followed suit. The falling of the coins did not distract or disturb him. He played on, continuing his communion with the All Compassionate Giver of Gifts. I then remembered the lines purported to have been uttered by the Lord.

"I dwell not in Vaikuntha nor in the Sun, but when Bhaktars sing there be I, Oh, Narada."

Could it be that Lord Murugan leaves His sanctum sanctorum, comes out to squat by his side, unseen and unnoticed, to listen to the charming music poured out by this blind Bhaktan?

The truth of the historical account flashed past my mental eye that Ravana, who had been pinned down by the Lord's feet, when he attempted to dislodge the Konesar Temple, was able to escape unhurt by playing his improvised Veena and charming Lord Konesar by his sweet music, sung in repentance of his folly'.

## A Garland of Tamil Inscriptions

( BY J. R. SINNATAMBY )

I am giving below references to Tamil inscriptions which girdle Ceylon (Sri Lanka) These inscriptions range from an early period to as late as the 15th century A. D

**Nainativu** This is an inscription by Parakrama Bahu I a Tamil by descent who ruled in Ceylon in about 12th century A. D. This inscription can still be seen at the Hindu temple at Nainativu. It gives instructions to the navigators as to which port ships should report namely Uraturai, ( Ur-Kavul-Thurai ).

**Padawiya** Velupillai Ceylon Tamil Inscriptions Vol. 1 has pointed out that there are a considerable number of Tamil inscriptions at Padawiya, where the ancient tank of the same name has now been restored.

Velupillai has pointed out that a seal discovered at Padawiya confirms that the ancient name of Padawiya was Pati. It is given in the seal as Sri Pati Grama.

Kokkilay lagoon into which the water flows from this tank has been identified with Pati Sinus of Ptolemy's Geography) of Ceylon. (C. 100 A D by me. Pati Sinus would mean the Gulf of the tank Pati.

In this context the following extract from my work "Ceylon in Ptolemy's Geography", Revised Edition, is of interest,

In the sessional paper 1896 (Pt 13 A P P D, P 3) it is pointed out that "The combined rivers pass out of the breach of Padawiya ......It flows on thence toward the coast until it flows into the Kokkilay Lagoon to the South of Mullaitivu, twenty three miles from the embankment of Padawiya".

The word Pati is still retained in the Tamil name for the tank. This is clear from P 14 of the Sessional Paper referred to above where it states "The word 'Pahavilaka' in the Ratgallegama inscription (No. 64) may be intended for Padawiya and the modern name Pativil shows that among its various designations it possessed a termination in Vila"......and the location of Pati Sinus on Ptolemy's map of Ceylon is just where Kokkilay Lagoon is located in modern maps".

**Trincomalee** This is a Tamil inscription which refers to various foreign powers which ruled in Ceylon and that it will be finally ruled by the Vadugars (Northerners). This is not surprising as the double carp which is the emblem of the Pandyans is also engraved on this inscription. The Pandyans were Tamils, who it has been authentically established ruled in South India from 6th century B. C. if not the 10th century B. C. and who supplied Ceylon with her first Queen. In fact the Pandyan kingdom is indicated by Ptolemy in his geography of India (C. 100 A. D.)

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday January 21, 1977.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org